
# சத்தியம்

தட்டவர்த்தி வீரராகவராவ்



பிரம்மர்ஷி பத்ரிஜியின்
ஆசிர்வாதங்களுடன்...

# சத்தியம்



எழுதி வெளியிட்டவர்: தட்டவர்த்தி வீரராகவராவ்
மொழி பெயர்ப்பு : ஸ்வப்னா
திருத்தம் : சுப்பிரமணியம்

புத்தகங்களைப் பெற
தட்டவர்த்தி வீரராகவராவ்
தட்டவர்த்திவாரி தெரு , பீமவரம்-534201.
ஆந்திர மாநிலம். செல்: 94403 09812

**விலை : Rs. 50/-**

# பொருளடக்கம்


1. சத்தியம் 3

2. சத்தியம் என்றால் தெய்வத்தின் இலட்சணங்கள் 10

3. சத்தியத்தியத்தை பின்பற்றினால் 16

4. சத்தியத்தின் மகத்துவம் 17

5. சத்தியத்தின் மகத்துவத்தை பற்றி மேலும் நாம் அறிந்து கொள்வோம் 23

6. சங்கராச்சாரியாரின் ஆன்ம போதனைகள் 25

7. சத்தியத்தைப் பற்றி உபநிஷங்களிள் வரும் வாக்கியங்கள் 27

8. ஞான நேத்திரம் 29

9. சத்தியத்தை அடைந்தால் 31

10. ஆன்ம - விசாரணை 32

11. ஆன்மா - அனாத்மா விவேகம் 33

12. சதானந்தயோகி என்ன சொன்னார் என்றால்? 35

# சத்தியம்

இந்த சிருஷ்டியில் சத்தியம் அசத்தியம் இரண்டும் உள்ளன. இவற்றைப் பற்றி விரிவாக அறிந்து கொள்வோம்.

உண்மையில் சத்தியம் என்றால் என்ன?

சத்தியம் என்றால்? நித்தியமானது நித்தியமானது என்றால்? நிரந்தரமானது.

நிரந்தரமானது என்றால்? எப்போதும் இருப்பது. எப்போதும் இருப்பது என்றால்? மாறாமல் இருப்பது. மாறாமல் இருப்பது என்றால்? காலம் மாறினாலும், யுகங்கள் மாறினாலும் மாறாதது.

ஒரு விதமாக சொன்னால் சத்தியம் நித்தியமாக இருக்க வேண்டும், அது எப்போதும் இருக்க வேண்டும், அது மாறக்கூடாது. அதாவது, காலம் மாறினாலும், யுகங்கள் மாறினாலும் மாறாததே சத்தியம். இந்த குணாதிசயங்கள் எதிலெல்லாம் காணப்படுகிறதோ அவை அனைத்தும் சத்தியம். இந்த குணாதிசயங்கள் காணப்படாத அனைத்தும் அசத்தியம் எனப்படும்.

அந்த குணாதிசயங்கள் எதிலெல்லாம் இருக்கிறது? என்றால் ஒன்றே ஒன்றில் மட்டுமே, அதுவே தெய்வம், அந்த தெய்வமே சத்தியம், அவரே ஆன்மா என்று அழைக்கப்படுகிறார். அதாவது ஆன்மா சத்தியமானது என்பதை நாம் அறிந்து கொள்வோம். இந்த சிருஷ்டியில் ஆன்மாவைத் தவிர மற்ற அனைத்தும் அசத்தியமே!

வேதங்களில், "சத்யமேவ ஜெயதே" என்று சொல்லப்பட்டுள்ளது. அப்படியென்றால் வாய்மையே வெல்லும் என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது.

எனவே, ஒரு மனிதன் எதிலும் வெற்றி பெற விரும்பினால், அவன் சத்தியத்திலேயே வாழ வேண்டும்!

ஒரு மனிதன் பலவற்றைக் வெல்ல வேண்டும். அவன் துக்கத்தை வெல்ல வேண்டும், அமைதியின்மையை வெல்ல வேண்டும், துன்பத்தை வெல்ல வேண்டும், கஷ்டங்களை வெல்ல

வேண்டும், பிரச்சனைகள் வெல்ல வேண்டும் . மற்றும் இவை அனைத்தும் சத்தியத்தில் அடைக்கலம் புகுந்தவர்களுக்கும் , சத்தியத்தைப் பேசுபவர்களுக்கும், சத்தியத்தில் வாழ்பவர்களுக்கும் மட்டுமே சாத்தியமாகும்.

ஆகவே, அசத்தியத்தை நாடினாலும், அசத்தியத்தில் வாழ்ந்தாலும், அல்லது அசத்தியத்தைப் பேசினாலும்... அவர்களுக்கு அனைத்தும் தோல்விகளே! அப்படியென்றால் அவர்களுக்கு கஷ்டங்கள், நஷ்டங்கள், துக்கங்கள், அமைதியின்மை, கவலைகள் என அனைத்தும் இருக்கும் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

அசத்தியம் என்றால் என்ன? முதலில், சத்தியம் என்றால் என்ன என்பதை பார்ப்போம். சத்தியம் என்பது தெய்வம், அவரே ஆன்மா என்றும் அழைக்கப்படுகிறார் . ஆன்மாவே சத்தியம்.. தெய்வம் தான் சத்தியம்.. இந்து மதத்தில் அவர் பரபிரம்மம் என்றும், முஸ்லிம்களால் அல்லா என்றும், கிறிஸ்தவர்களால் பிதா என்றும் அழைக்கப்படுகிறார்.

ஆதி சங்கராச்சாரியார், "பிரம்ம சத்யம், ஜகத் மித்யா" என்றார். அவர் சொன்னபடி, தெய்வம் மட்டுமே நித்தியமானவர். மற்ற அனைத்தும், உலகில் உள்ள அனைத்தும், நிலையற்றவை, இல்லாதவை, மறைந்து போகின்றன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். எனவே, தெய்வம் தவிர மற்ற அனைத்தும் அசத்தியம். ஆன்மா அல்லாத அனைத்தும் அசத்தியம் என்று சங்கராச்சாரியார் கூறியுள்ளார்.

எனவே, ஆன்மா அல்லாத எதுவும் அசத்தியத்தில் தஞ்சம் அடைவது போன்றது என்பதை தெரிந்து கொள்ளலாம்! ஒரு வகையில், வடிவம் கொண்ட அனைத்தும், இந்தக் கண்களுக்குத் தெரியும் அனைத்தும், அசத்தியமே. வேறு வார்த்தைகளில் கூறுவதானால்? சத்தியம் படைக்கப்படாதது மற்றும் முடிவற்றது, சத்தியத்திற்கு பிறப்பும் இறப்பும் இல்லை.

உலகில் எங்கு பார்த்தாலும் வேதனை, அமைதியின்மை, வலி, கஷ்டம் எல்லாம் நிறைந்திருக்கிறது. உலகம் முழுவதும் பார்த்தால், இது புரியும். ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு வகையான துக்கம் இருக்கும். துக்கம் என்றால் **"துன்பத்தை**

**ஏற்படுத்தும் எந்தவொரு பிரச்சினையும் துக்கம் என்று அழைக்கப்படுகிறது."**

இங்கு பார்த்தால் மனிதர்களுக்கு பல வகையான பிரச்சினைகள் உள்ளன.

1.உடல்நலப் பிரச்சினைகள்: சில நூறு அல்ல, ஆயிரக்கணக்கானவை உள்ளன.

2.நிதி சிக்கல்கள்: - இவற்றிலும் நூற்றுக்கணக்கான வகைகள் உள்ளன.

3.குடும்பப் பிரச்சினைகள்: - இதன் பொருள் குடும்ப உறுப்பினர்களுக்கும் உறவினர்களுக்கும் இடையிலான பிரச்சினைகள்.

4.சம்சாரப் பிரச்சனைகள்: - அதாவது கணவன் மனைவிக்கிடையிலான பிரச்சனைகள்.

5.அண்டை வீட்டாருடன் பிரச்சனைகள்.

6. முதுமைப் பிரச்சினைகள்: - இவை முதுமையில் ஏற்படும் பிரச்சினைகள்.

7. மரணத்திற்குப் பின் வாழ்க்கைப் பிரச்சனைகள்.

மனிதர்கள் ஏன் இத்தகைய பிரச்சினைகளால் அவதிப்படுகிறார்கள்? எல்லோரும் அசத்தியத்தில் வாழ்கிறார்கள்! எல்லோரும் அசத்தியத்தை நாடுகிறார்கள். அவர்கள் அசத்தியத்தின் மீது மோகத்தை வளர்த்துக் கொள்கிறார்கள். அசத்தியம் பெரியது என்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் அசத்தியத்தின் பின் சென்று கொண்டிருக்கிறார்கள். அசத்தியத்தின் பின் செல்லும் வரை, அவர்களின் வாழ்க்கை வரம்புக்குட்பட்டது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அவர் எத்தனை தெய்வங்களில் அடைக்கலம் புகுந்தாலும், எத்தனை யாத்திரைகள் மேற்கொண்டாலும், எத்தனை குருமார்கள், சுவாமிஜிகள் மற்றும் பாபாக்களிடம் சென்றாலும், அவர் துக்கத்திலிருந்து மீள முடியாது.

உலகம் முழுவதும் அசத்தியத்தில் தஞ்சம் புகுந்து கொண்டிருக்கிறது. அவர்கள் அசத்தியமான சிலைகள், புகைப்படங்கள் மற்றும் படங்களை வணங்குகிறார்கள். இங்கே,

அசத்தியம் என்பது ஒரு காலத்தில் இருந்ததையும் இனி இல்லாததையும் குறிக்கிறது. மாற்றமடைந்தது, நிரந்தரமற்றது.

ஒரு வகையில், சிலைகளை வணங்குபவர்கள் அசத்தியத்தை வணங்குபவர்களே. அதனால்தான் அவர்கள் சிறுவயதிலிருந்தே சிலைகளை வணங்கி வந்தாலும், அவற்றின் படங்களைப் பிரார்த்தனை செய்தாலும்... அவர்கள் துக்கத்தில், பிரச்சனைகளில் வாழ்கிறார்கள். காரணம், ஆன்மா தான் சத்தியம் என்பதை அவர்கள் அறியாதது தான்.

பலர் தெய்வத்தை வணங்கினால் புண்ணியம் கிடைக்கும் என்று நினைக்கிறார்கள். ஆனால் தெய்வத்திற்குப் பதிலாக, அதாவது ஆன்மாவுக்குப் பதிலாக அசத்தியத்தியத்தை வணங்கினால் அவர்களுக்கு எப்படி புண்ணியம் கிடைக்கும்? அப்படிச் சொன்னாலும் அவர்களுக்குப் புரியாது.

பத்ரிஜியின் பிரமிட் தியானங்களின் 18 சிறந்த கொள்கைகளில், "அசத்தியமான சிலைகளை வணங்காதீர்கள், ஆனால் சத்தியமான ஆன்மாவை வணங்குங்கள்" என்று அவர் கூறினார். காரணம், சத்தியமே தெய்வம் என்பதால். எனவே, ஆன்மாவை அதாவது தெய்வத்தைப் பற்றிக் கொண்டு தியானிக்க வேண்டும் என்று பத்ரிஜி அவர்கள் கூறினார்.

காரணம், தெய்வமே ஆன்மா என்பது, பகவத் கீதையின் 10வது அத்தியாயத்தின் 20வது வசனத்தில் பகவான் கிருஷ்ணரே தெளிவாகக் கூறினார்.

**ஸ்லோகம்: அஹமாத்ம குடகேச ஸர்வபூதாசயஸ்திதே:**

**அஹ்மதிச்ச மத்யம் ச பூதானமந்த ஏவ ச (ப கீ: 10-20)**

விளக்கம்: “ஓ அர்ஜுனா! எல்லா உயிர்களின் இதயத்தில் வசிப்பது நானே ஆன்மா. எல்லா உயிர்களின் துவக்கமும், நடுவும் மற்றும் முடிவும் ஆகிறேன்”.

கிருஷ்ண பகவான் கூறிய இந்தப் பதத்தின்படி, ஆன்மாவே தெய்வம், என்றும், அவர் அனைத்து உயிர்களின் உடல்களிலும் இருக்கிறார் என்றும் தெளிவாக நாம் தெரிந்து கொள்ளலாம்.

எனவே, சத்தியத்தை வழிபடுவது என்றால் ஆன்மாவை வழிபடுவது என்று பொருள். உடலில் உள்ள ஆன்மாவை அறிய,

ஆன்மாவிற்குள் செல்வதுதான் ஒரே வழி... அதைத்தான் பத்ரிஜி அவர்கள் “மூச்சின் மீது கவனம்” செலுத்தும் “தியானம் “என்று கூறுகிறார்.

மேலும் பகவத் கீதையில், நான் ஆன்மா என்பது பகவான் கிருஷ்ணரிடமிருந்து தெளிவாகத் தெரிகிறது. எனவே, அசத்தியத்தைக் கைவிட்டு சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர் சிறந்த மனிதர். ஆனால், வழிபாட்டுடன் தியானம் செய்து கொண்டிருப்பவர் சிறந்தவர் அல்ல. ஏனென்றால், அவர் இந்து அசத்தியத்தைக் கைவிடவில்லை, சத்தியத்தை நம்பவில்லை என்றே அர்த்தம்.

பகவத் கீதையில் சத்தியத்தை கடைப்பிடிக்க சொல்லப்பட்டுள்ளது. எனவே, ஆன்மாவைப் பற்றிக் கொள்பவர்கள், தெய்வத்தை அடைகிறார்கள், என்றென்றும் துக்கத்திலிருந்து விடுபடுகிறார்கள். அது தான் பின்வரும் வசனங்களில் சொல்லப்பட்டுள்ளது.

**ஸ்லோகம்: யே த்வக்ஷரம் அனிர்தேஷ்யம் அவ்யக்தம் பர்யுபாஸதே**
**ஸர்வத்ரகமசின்த்யம் ச குடஸ்தம் அசலம் த்ருவம் || (ப கீ.12-3)**

**ஸ்லோகம்: ஸந்நியாம்யேந்த் ரியக் ராமம் ஸர்வத்ர சமபுத்தய:**
**தே ப்ராப்னுவந்தி மாமேவ ஸர்வபூதஹிதே ரதா: (ப கீ. 12-4)**

விளக்கம்:- தங்கள் புலன்கள் அனைத்தையும் அடக்கி, எப்போதும் மன உறுதியுடன், அனைத்து உயிரினங்களுக்கும் நன்மை செய்ய ஆர்வமாக இருப்பவர்கள், நினைத்துப் பார்க்க முடியாத, புலப்படாத, மாறாத, நித்தியமான, எங்கும் நிறைந்த, பர பிரம்மமான ஆன்மாவை தியானிப்பபார்களோ அவர்கள் என்னை வந்து அடைவார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணர் கூறியது போல, புலன்களைக் கட்டுப்படுத்த, முதலில் கண்களை மூடிக் கொண்டு, கை விரல்களை கோர்த்துக் கொண்டு, கால்களை மடித்துக் கொண்டு உட்கார வேண்டும். எண்ணங்கள் வரும், அவற்றைத் துண்டித்து 'மூச்சை' மட்டும் கவனிக்க வேண்டும். சிறிது நேரத்திற்கு பிறகு எல்லா எண்ணங்களும் நின்றுவிடும். மனம் கூட செயல்படாத

நிலைக்கு சென்று விடும். பின்னர் ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னது போல் புலன்களை கட்டுப்படுத்தியவர்கள் ஆவார்கள்.

அவர் மேலும் என்ன சொன்னார் என்றால்? அனைவருக்கும் சமத்துவம் வேண்டும் என்று அவர் விரும்பினார். அனைவரும் என்றால்? மனிதர்கள் உட்பட அனைத்து உயிரினங்களும் வேறுபட்டவை அல்ல. அந்த உணர்வை நாம் கொண்டிருக்க விரும்பினார்.

ஸ்ரீ கிருஷ்ணர் வேறு என்ன கூறினார் என்றால்? அனைத்து உயிரினங்களுக்கும் நன்மை செய்வதில் ஆர்வம் காட்ட விரும்பினார். அதாவது, அனைத்து வகையான விலங்குகள், பறவைகள் மற்றும் நீர்வாழ் உயிரினங்களை சித்திரவதை செய்யாமலோ அல்லது கொல்லாமலோ பாதுகாக்க விரும்பினார்.

இந்த வழியில் வாழ்ந்து, அழியாத, கண்ணுக்குத் தெரியாத, அசையாத, நித்தியமான, எங்கும் நிறைந்த அக்ஷர பரபிரம்மத்தை தியானிப்பவர்கள் தெய்வமான ஆத்மாவை அடைவார்கள் என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறுகிறார்.

இங்கு நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன? தெய்வத்தின் சத்தியத்தை அடைவது எளிதான அல்லது எளிமையான விஷயம் அல்ல. ஆனால் நாம் தியானம் செய்தால் அது சாத்தியமாகும். அத்தகையவர்கள் எல்லா துக்கங்களிலிருந்தும் நிரந்தரமாக விடுபட முடியும். அதனால்தான் பத்ரிஜி அவர்கள் சத்தியத்தை வணங்க வேண்டும் என்று கூறினார்.

அதேபோல், சத்ய சாய் பாபா ஐந்து கட்டளைகளைக் கற்பித்தார். அவை சத்தியம், நீதி, அகிம்சை, அன்பு மற்றும் அமைதி. அதாவது, அவர் முதலில் சத்தியத்தைப் பற்றிப் பேசினார்.

அந்த சத்தியம் இந்து மதத்தில் பரமாத்மா, பரபிரம்மம், பகவான், படைப்பாளர், விஸ்வாத்மா, பரமேஸ்வரா, லலிதாதேவி, ஆதி சக்தி என பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. முஸ்லிம்கள் அல்லா என்றும், கிறிஸ்துவர்கள் பிதா என்றும் அழைக்கிறார்கள்.

பத்ரிஜியும் அத்தகைய சத்தியத்தை ஆதரித்து, சத்தியத்தை மட்டுமே வணங்க வேண்டும் என்றார். 18 சிறந்த சூத்திரங்களில் 14வது சூத்திரம் "சிலைகளை வணங்காதீர்கள், ஆனால் சத்தியத்தை மட்டுமே வணங்குங்கள்" என்று அவர் கூறினார். மேலும் அத்தகைய சத்தியத்தை யார் புரிந்து கொள்ள முடியும்? சத்தியத்தை ஆதரிப்பவர்களால் மட்டுமே, அசத்தியத்தை ஆதரிப்பவர்களால் புரிந்து கொள்ள முடியாது.

வேதங்களில் "சத்யமேவ ஜெயதே" என்று கூறப்பட்டுள்ளது. அதாவது, சத்தியத்தை ஆதரித்தாலும் , சத்தியத்தில் வாழ்ந்தாலும், வாழ்க்கையில் எல்லாவற்றிலும் வெற்றி பெறுவார்கள். அவர்கள் வாழ்க்கையின் அனைத்து விஷயங்களிலும் வெற்றி பெறலாம். ஆனால் உண்மையான வெற்றி யாருக்கு கிடைக்கிறது யார் துக்கத்திலிருந்து நிரந்தரமாக விடுபடுகிறார்களோ! அவர்கள் தான் உண்மையான வெற்றி பெற்றவர்கள். அதையே பெரியவர்கள் "மோட்சம்" என்று கூறினர். இந்த மோட்சம் சத்தியத்தை சார்ந்திருந்தால் கிடைக்கும்.

இந்தச் சிருஷ்டியில் மரங்கள், புழுக்கள், பாம்புகள், பறவைகள், மிருகங்கள், மனிதர்கள், சூரியன், சந்திரன், நவகிரகங்கள் என பல இருக்கின்றன. இவற்றில் ஏதற்காவது ஆன்மாவிற்கு, அதாவது சத்தியத்திற்கு உரிய இயல்புகள் உள்ளனவா? இல்லை என்று தெளிவாக சொல்லலாம். ஏனெனில் இந்த சிருஷ்டியில் உருவாக்கப்பட்ட அனைத்தும் ஒரு நாள் மறைந்து போகும். எனவே, படைக்கப்படாதது சத்தியம், முடிவில்லாததே சத்தியம். அதுவே தெய்வம், அவரே பரப்பிரம்மம்; அதுவே ஆன்மா என்று கூறப்படுகிறது.

பத்ரிஜி அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் எல்லோரும் நாராயணனாக மாற வேண்டும் என்று கூறினார். அப்படிப்பட்டவர்களுக்கு மட்டுமே லட்சுமி தேவியின் அருள் கிடைக்கும் என்றார். அதாவது அவர்கள் வாழ்க்கையில் ஐஸ்வர்யத்தையும், எல்லா சுகங்களையும் அனுபவிப்பார்கள் என்றார். நாராயணராக வேண்டுமெனில் ஆன்மாவை, அதாவது சத்தியத்தை நாட வேண்டும், அதற்காக தியானம் செய்ய வேண்டும் என்று அவர் கூறினார்.

# சத்தியம் என்றால் தெய்வத்தின் இலட்சணங்கள்

1. **சர்வவ்யாபி** - சகலச்சராசர சிருஷ்டியில் முழுவதும் பரவி இருப்பவர்.
2. **ஸ்தான விசேஷம் இல்லாதவன்** - ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் இருப்பவன் அல்ல.
3. **சர்வாந்தர்யாமி** - அனைத்து ஜீவராசிகளிலும் அந்தர்யாமியாக இருப்பவன்.
4. **நிராகரன்**- உருவமற்றவன்.
5. **அவ்யக்தன்** - வெளிப்படாதவன், காணப்படாதவன்.
6. **நாம ரஹிதன்** - பெயரற்றவன்.
7. **ரூப ரஹிதன்** - உருவம் இல்லாதவன்
8. **விதேஹன்** - தேகம் இல்லாதவன்; கைகள், கால்கள் இல்லாதவன்; ஆடை, ஆபரணம் இல்லாதவன்.
9. **ஸ்ரவணஹீனன்** - செவி இல்லாதவன்; கண்கள் இல்லாதவன்; கோத்திரம் இல்லாதவன்.
10. **ஸ்வயம்சித்தன்** - தானாகவே இருப்பவன்; பால்யம், யௌவனம், வர்தக்யம் போன்ற நிலையற்ற மாற்றங்களுக்கு புறம்பானவன்.
11. **தரிசிக்க இயலாதவர்** - பௌதீக கண்களால் காண முடியாதவன்.
12. **இந்திரியதீதன்** - இந்திரியங்களுக்கு அப்பாற்பட்டவன்; ஞானேந்திரியங்கள், கர்மேந்திரியங்கள், மனம் ஆகியவற்றால் அறிய முடியாதவன்.
13. **அப்ரமேயன்** - உவமைகளால் விளக்க முடியாதவன்.

14. **நிர்குணன்** - குணங்களற்றவன்

15. **வர்ணஹீனன்** - குலம், கோத்திரம் இல்லாதவன்; பாலினம், ஒருமை பன்மை, வேற்றுமை ஆகிய எல்லைகளுக்கும் அப்பாற்பட்டவன்.

16. **நிர்மலன்** - மாசற்றவன்; மலினமில்லாதவன்.

17. **அவ்யயன்**- குறையாதவன்; அழிவில்லாதவன்.

18. **அவிநாசி** - அழிவில்லாதவன்.

19. **பிறப்பு, இறப்பு இல்லாதவன்** - ஆதியும் அந்தமும் இல்லாதவன்; சிருஷ்டிக்கப்படாதவன்; அழிக்க முடியாதவன்.

20. **அனந்தன்** - முடிவில்லாதவன்.

21. **அபரிமிதன்** - எல்லையற்றவன்

22. **ஷடூர்ம ரஹிதன்** - ஆறு ஊர்மிகளற்றவன்: 1.பிறப்பு, மரணம் (உடல் தர்மம்) 2. பசி, தாகம் ( பிராண தர்மம்) 3. சோகம், மோகம் ( மனோ தர்மம்) இவற்றில் எதுவும் இல்லாதவன்.

23. **ராக-த்வேஷ ரஹிதன்** - விருப்பு, வெறுப்பு இல்லாதவன்; சத்ரு, மித்ரு பேதமில்லாதவன். பூஜை செய்தவரை ஒரு விதமாகவும், செய்யாதவரை வேறு விதமாகவும் பார்க்காதவன்.

24. **ஜகந்நாடக சூத்திரதாரி** - இந்த உலகம் என்ற நாடகத்தின் சூத்திரதாரி; உருவாக்குனரும் இயக்குனரும் அவரே.

25. **நிச்சலன்** - அசையாமல் நிலைத்துப் பிரகாசிப்பவன்.

26. **சாட்சீபூதன்** - அனைத்திற்கும் சாட்சியாக இருப்பவன்; எவருடைய செயல்களிலும் தலையிடதாவன்.

27. **பரிபூரணண்** - முழுமையாக நிரைந்திருப்பவன்.

28. **காலதீதன்** - காலத்திற்கு அப்பாற்பட்டவன்.

29. **அகண்டன் -** பாகங்களாக பிரியாதவன்; ஒருமையாக இருப்பவன்.

30. **அக்ஷரன்** - அழிவில்லாதவன்.

31. **ஸ்வயம்பிரகாசன்** - பிறரால் ஒளியூட்டப்படாதவன்; தானாகவே பிரகாசிப்பவன்.

32. **இச்சையற்றவன்** - ஆசையற்றவன்.

33. **கிரியாஹூனன்** - கர்மங்கள் செய்யாதவன்.

34. **நிஷ்க்ரியன்** - செயற்பாடற்றவன்.

35. **உபாதி ஹீனன்-** எந்த உபாதிகளும் ( அடையாளக் கட்டுப்பாடுகளும்) இல்லாதவன்.

36. **அகல்பிதன்** - யாராலும் உருவாக்கப்படாதவன்; கற்பனை செய்து உருவாக்க முடியாதவன்.

37. **ஸ்வயம்பூ** - யாராலும் சிருஷ்டிக்கப்படாதவன்; தானாகவே இருப்பவன்; பிராண பிரதிஷ்டை செய்ய இயலாதவன்.

38. **ஆதி-மத்திய-அந்த ரஹிதன்** - தொடக்கம், நடு, முடிவு இல்லாதவன்; எப்போதும் இருப்பவன்.

39. **அணு அணுவாக வியாபித்தவன்** - அவர் இல்லாத இடம் எதுவும் இல்லை; ஆகையால் அவருக்கு அழிவே இல்லை.

40. **சகல சராசர ரூபன்** - சிருஷ்டியில் அசைவுடையவை (கிருமி, பறவை, மிருகம், மனிதன்) மற்றும் அசைவற்றவை (மரம், கனிமம் போன்றவை) அனைத்திலும் வியாபித்திருப்பவன்.

41. **அபோக்தா-** அனுபவிப்பது போலத் தோன்றினாலும் அனுபவிக்காதவன்; காண்பது போல் இருந்தும் பற்றில்லாதவன்.

42. **பக்ஷபாத ரஹிதன் -** எவரிடமும் சார்பில்லாதவன்; ஒருவரை உயர்த்தி மற்றொருவரை தாழ்த்திப் பார்க்காதவன்.

43. **அத்வைதவன் -** இரண்டவற்றவன்; ஒருமையாக இருப்பவன்.

44. **நித்யன் -** எப்போதும் இருப்பவன்.

45. **சாஷ்வதன் -** நிலைத்திருப்பவன்; என்றும் அழியாதவன்.

46. **சத்யஸ்வரூன் -** மாற்றமற்றவன்; யுகங்கள் மாறினாலும் மாறாதவன்.

47. **சைத்தன்ய ஸ்வரூபன் -** அனைத்து ஜுவராசிகளுக்கும் சைத்தன்யத்தை ( உயிர் உணர்வை) அளிப்பவன்; இயங்கும் சக்தியைத் தருபவன்.

48. **ஆனந்த ஸ்வரூபன் -** எப்போதும் ஆனந்த நிலையில் இருப்பவன்; ஆனந்தமே அவரின் இயல்பு.

49. **சச்சிதானந்த ஸ்வரூபன் -** (சத்-சத்-ஆனந்தம்)
சத் - சத்திய ஸ்வரூபம்
சித் - சைத்தன்ய ஸ்வரூபம்
ஆனந்தம் - ஆனந்த ஸ்வரூபம்

50. **நாசரஹிதன் -** அழிவில்லாதவன்; அவிநாசி.

51. **மாயதீதன் -** மாயைக்கு உட்படாதவன்.

52. **சித்ரூபன் -** பரம சைத்தன்ய வடிவுடையவன்.

53. **சனாதனன் -** ஆதியற்றவன்; அனாதி ரூபன்.

54. **அனந்த சக்தி ஸ்வரூபன் -** அளவிட முடியாத சக்தி கொண்டவன். ஆத்மா இல்லாத உடல் (சவம்) செயல்படாது; ஆத்மா உள்ள உடல் செயல்படும். மேலும் சிருஷ்டியில் உள்ள 84 லட்சம் ஜீவராசிகளும் ஆத்ம சக்தியிலேயே இயங்குகின்றன. ஆகவே ஆத்மா அனந்த சக்தி உடையது என்று கூறப்படுகிறது.

55. **துரியாதீதன்** - துரிய நிலையை தாண்டியவன்.

1. **ஜாக்ரத்** : விழிப்பு நிலை, உடலும் புலன்களும் வேலை செய்யும்

2. **ஸ்வப்னம்** : கனவு நிலை, மனம் மட்டுமே இயங்கும்

3. **சுஷூப்தி** : ஆழ்ந்த உறக்கம், மனம் வேலை செய்யாது

4. **துரியம்** : மனம் இல்லாத நிலை; சுத்த சாட்சி நிலை.

5.**துரியாதீதம்**:எல்லாவற்றையும் தாண்டிய பரம சூன்ய நிலை.

56. **பராத்பரன்** - உலகத்தை விட மேலானவன்.

57. **விஸ்வரூபம்** - உலகமெங்கும் அவரின் ரூபமே.

58. **விஸ்வாத்மா** - உலகமெங்கும் நிறைந்திருக்கும் ஆத்மா.

59. **மூலாத்மா** - அனைத்து ஆத்மாக்களுக்கும் மூலாதாரமாக இருக்கும் ஆத்மா.

60. **பரமாத்மா** - எல்லாவற்றிலும் சிறந்தவர்.\

61. **பரப்பிரம்மம்** - அனைத்திற்கும் தந்தையான பரம தத்துவம்.

62. **சிருஷ்டிகர்த்தா** - சகல சராசரி சிருஷ்டியையும் உருவாக்கியவன்.

ஒரு வகையில் சொல்வதென்றால், யாராலும் சத்தியத்தைப் பற்றி விவரிக்கவோ, சொல்லவோ, அறியவோ முடியாது. அவர் அனைத்திற்கும் அப்பாற்பட்டவர். அத்தகைய மகத்துவமுடையவரே பகவான்.

எனவே, சத்தியத்தை பின்பற்றுபவர்கள் சக்தி வாய்ந்தவர்களாகிறார்கள். அவர்கள் சக்தி வாய்ந்தவர்களாகும் போது என்ன நடக்கும் என்றால்? அவர்கள் ரமண மகரிஷி, சுவாமி விவேகானந்தர், வீர பிரம்மேந்திர சுவாமி, ஷீரடி சாய்பாபா, பத்ரிஜி போன்றவர்களாக உயர்கிறார்கள். இவ்வாறான மகான்கள் யுக யுகங்களாகப் பலர் தோன்றியுள்ளனர். அவர்கள்

அனைவரும் பேராற்றலைப் பெற்றவர்கள்; ஆன்மீக சக்தியால் நிரம்பியவர்கள்.

அப்படி பேராற்றல் பெற்றவர்களின் செயல்கள் எப்படி இருக்கும் என்பதைப் பார்ப்போம்.

1. எந்த சூழ்நிலையிலும் அசத்தியம் பேச மாட்டார்கள்.
2. சிருஷ்டிக்கு விரோதமான செயல்கள் செய்யமாட்டார்கள்.
3. யாரையும் விமர்சிக்கமாட்டார்கள்; பொறாமை கொள்ளமாட்டார்கள்.
4. அவர்கள் பெருமை பேசுவதில்லை, எதற்கும் ஆசைப்படமாட்டார்கள்.
5. நிகழ்காலத்தில் வாழ்வார்கள்.
6. சாட்சியாகச் செயல்படுவார்கள்.
7. தூய்மையான வாழ்க்கை வாழ்வார்கள்.
8. எதையும் ஹிம்சிக்கமாட்டார்கள் எறும்பு, கொசு, பூச்சிகள் போன்ற எந்த உயிரையும் அழிக்க மாட்டார்கள்.
9. யாரையும் வெறுக்க மாட்டார்கள், அனைவரையும் நேசிப்பார்கள்.
10. எதையும் கேட்கமாட்டார்கள், உள்ளதை பகிர்ந்து கொள்வார்கள்.
11. யாருடைய காலிலும் விழ மாட்டார்கள்.
12. ராக-த்வேஷம் இல்லாமல் இருப்பார்கள்.
13. மானம்-அவமானம், புகழ்ச்சி- இகழ்ச்சி, வெற்றி - தோல்வி, சுக - துக்கம், சோகம் - மோகம், பிறப்பு - இறப்பு போன்ற இரட்டைப பண்புகளிலும் சமநிலையில் இருப்பார்கள்.
14. தர்மரீதியான வாழ்க்கை வாழ்வார்கள்.
15. தாங்கள் ஞானம் பெறுவது மட்டுமல்ல; பிறருக்கும் ஞானம் அளிக்க முயல்வார்கள்.
16. சத்தியத்தில் நிலைத்திருந்து வாழ்வார்கள்.
17. ஆன்மீக செயல்களையும் ஆன்மீக சேவைகளையும் செய்வார்கள்.
18. பூரணாத்மர்களாகி சத்தியலோகத்தை அடைவார்கள்.

# சத்தியத்தியத்தை பின்பற்றினால்

சத்தியத்தை பின்பற்றியவர்கள், "மூச்சின் மீது கவனம் செலுத்தி தியானம் செய்பவர்கள் "- அவர்களின் செயல்களில் எப்படி மாற்றம் வருகிறது என்பதை பார்ப்போம்.

1. சத்தியத்தை பின்பற்றியவர்கள் அனைத்து உயிரினங்களுக்கும் இரக்கம், கருணை காட்டவும் அவற்றைப் பாதுகாக்கவும் முடியும்.
2. சத்தியத்தை பின்பற்றியவர்கள் அனைவருக்கும் நன்மை செய்வார்கள்.
3. சத்தியத்தை பின்பற்றியவர்கள் பாரபட்சம் காட்டுவதில்லை, கருணை காட்டுவார்கள்.
4. சத்தியத்தை பின்பற்றியவர்கள் அனைவருடனும் நட்பாக இருப்பார்கள்.
5. சத்தியத்தை பின்பற்றியவர்கள் ஆறு உணர்ச்சிகளை கட்டுப்படுத்துகிறார்கள் அவை : காமம் , கோவம் ,பேராசை , மோகம், பெருமை மற்றும் பொறாமை .
6. சத்தியத்தை பின்பற்றியவர்கள் அனைவருக்கும் முன்மாதிரியாக இருப்பார்கள்.
7. சத்தியத்தைக் பின்பற்றியவர்களின் புத்தி மலர்ச்சி அடையும்.
8. சத்தியத்தை பின்பற்றியவர்களுக்கு ஞானம் உதயமாகும்.
9. சத்தியத்தை பின்பற்றியவர்கள் எல்லாம் ஒன்று என்பதை அறிவார்கள். அவர்கள் அனைவரையும், எல்லாவற்றையும் நேசிப்பார்கள்.
10. ராஜ யோகம் என்பது சத்தியத்தில் நிலைத்திருப்பது. ராஜ யோகம் எல்லா யோகங்களையும் விடமிகப் பெரியது.

எனவே, சத்தியத்தை பின்பற்றியவர்கள் எல்லாவிதமான மாற்றங்களையும், நன்மைகளையும் அடைவார்கள். ஆனால் அசத்தியத்தில் வாழ்ந்து, அசத்தியத்தைப் பின்பற்றியவர்கள் அத்தகைய மாற்றம் எதுவும் அடைவதில்லை.

# சத்தியத்தின் மகத்துவம்

வேதங்களில், "**சத்தியம் வத, தர்மம் சர**" என்று கூறப்பட்டுள்ளது. அதாவது சத்தியத்தைப் பேச வேண்டும். தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது அதன் அர்த்தம்.

ஏனென்றால், மனிதர்கள் உணர்வுபூர்வமாக இரண்டு வகையான கர்மாக்களைச் செய்கிறார்கள். 1.**மொழியால், 2,செயலால்**

மனிதன் செய்யும் கர்மாக்கள் பிறருக்கு தீங்கு விளைவிக்காத வகையில் இருக்க வேண்டுமெனில், அவர்கள் பேசும் வார்த்தைகள் சத்தியமானதாக இருக்க வேண்டும். மேலும் அவர்கள் சத்தியம் மட்டுமே பேச வேண்டும். ஆனால் அசத்தியத்தை ஆதரித்தவர்கள் சத்தியத்தைப் பேச முடியாது.

அதேபோல், செயல்களும் தர்மமாக இருக்க வேண்டும். அதாவது தர்மத்திற்கேற்ற செயல்களையே செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, "**சத்யமேவ ஜெயதே**" என்றும் கூறப்பட்டுள்ளது. அதாவது - சத்தியமே வெல்லும் என்பதாகும். எந்த விஷயத்திலும் இறுதியில் வெல்வது சத்தியமே . எனவே, சத்தியமற்ற விஷயங்களால், தோல்வியே ஏற்படும் என்பதையும் அறிய வேண்டும்.

எனவே, சத்தியத்தை அறிய வேண்டும், சத்தியத்தை ஆதரிக்க வேண்டும், சத்தியத்தையே பேச வேண்டும், சத்தியத்திலேயே வாழ வேண்டும்.

வேதங்களில் "தத்வமசி" என்று கூறப்பட்டுள்ளது.

தத் என்றால் அது, அதாவது சத்தியம், பரமாத்மா. மசி என்பது நீயே ஆகி உள்ளாய். அதாவது - “அது நீயாக இருக்கிறாய்”. அர்த்தம் - சத்தியமே நீயாக இருக்கிறாய்.

மேலும், சத்தியத்தில் அடைக்கலம் புகுந்தவர்களுக்கு மட்டுமே அமைதியும் மகிழ்ச்சியும் இருக்கும். இல்லையெனில், அமைதியின்மையும் துக்கமும் இருக்கும்.

அதனால் பத்ரிஜி அவர்கள் என்ன சொன்னார் என்றால்? சத்தியத்தில் வாழ்வதே ஆன்மீகம் அசத்தியத்தில் வாழ்வது அனாத்மீகம் என்று கூறிகிறார்.

அதேபோல், சத்தியத்தை நாடினால், திருப்தி, இல்லையென்றால் அதிருப்தி தான் இருக்கும்.

மேலும் சத்தியத்தை அடைவதற்கு வேறு எந்த வழியும் இல்லை என்பதை தெரிந்து கொள்ளவும். மேலும் சத்தியத்தை அடைவதற்கான ஒரே வழி "மூச்சின் மீது கவனம்" - தியானம்.

இப்போது நம் கண்களால் காணும் உலகத்தையே எடுத்துக் கொள்வோம். அதில் எது நிரந்தரமானது? எது மாறாதது? எது எப்போதும் இருக்கும் என்றால்? ஒன்றுமில்லை.

இதை நாம் கவனித்தால், எண்ணற்ற தாவரங்கள், பூச்சிகள், மீன்கள், பறவைகள், விலங்குகள் மற்றும் மனிதர்கள் அனைத்தும் பிறந்து, வளர்ந்து மற்றும் மாற்றமடைந்து, இறுதியாக அழிந்து போவதைக் காண்போம். நாம் எதை எடுத்தாலும் இதுதான் நடக்கும். அதனால்தான் எந்த உயிரினத்தின் உடலுக்கும் ஆறு வகையான மாற்றங்கள் உள்ளன.

அவை என்ன?

1.பிறக்கிறது, 2.இருக்கிறது, 3.வளர்கிறது, 4.மாற்றமடைகிறது . 5. சுருங்குகிறது. 6. அழிகிறது.

இதனால் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது - எதுவும் நிரந்தரமானது இல்லை, எதுவும் எப்போதும் நிலைத்திருக்காது . அதாவது, மாற்றமடையும் எதுவும் சத்தியம் இல்லை என்பது தெளிவாகிறது.

காலம் மாறிக் கொண்டே இருந்தால் அனைத்தும் மாறிக் கொண்டே இருக்கும். உலகத்தில் மாற்றம் என்பது இயற்கையானது. மாற்றம் இல்லாமல் எதுவும் நிலைத்திருக்காது.

யுக யுகங்களாக காண்கிறோம் - ராஜ்யங்கள் அழிந்து விட்டன, ராஜாக்கள் மறைந்து விட்டனர், பலர் தோன்றி மறைந்து விட்டனர். இதனால் நாம் அறிய வேண்டியது எதுவும் நிரந்தரமில்லை, எதுவும் சத்தியம் இல்லை என்பதுதான்.

நம் கண்களால் காணும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள், கிரகமண்டலங்கள் இவை எல்லாம் படைப்பு முடியும் போது அழிந்து போகின்றன.

அதுமட்டுமல்ல, மிகப் பெரியவர்களாக நாம் கருதும் தேவர்களுக்குக் கூட ஆயுள் உண்டு. அவர்களின் ஆயுட்காலம் முடிந்தவுடன் அவர்கள் கூட மறைந்து விடுகின்றனர்.

அதாவது, பரமாத்மா, பரப்பிரம்மம், ஆத்மா ஆகிய இறைத் தத்துவத்தை தவிர மற்ற அனைத்தும் அழியக் கூடியவை என்பதை அறியலாம்.

இதைத்தான் பகவத் கீதையில் கிருஷ்ணர் கூறுகிறார்

**ஸ்லோகம்: ஸஹஸ்ரயுக பர்யந்தம் அஹர்யத் ப்ரஹ்மணோ விது:**

**ராத்ரிம் யுகஸஹஸ்ராந்தாம் தே(அ)ஹோராத்ரவிதோ ஜனா:**

**(ப கீ: 8-17)**

விளக்கம்:- பிரம்மாவின் ஒரு பகல் ஆயிரம் யுகங்களுக்கு சமம் என்றும், அவரின் ஒரு இரவு ஆயிரம் யுகங்களுக்கு சமம் என்றும் அறிந்தவர்கள் பகலும் இரவும் என்ற கால தத்துவத்தின் உண்மையை அறிந்தவர்களாகிறார்கள்.

ஸ்ரீ வித்யா பிரகாசானந்தகிரி சுவாமிகள் பகவத் கீதையின் ஒரு வசனத்தின் மூலம் பிரம்மாவின் ஆயுட்காலம் பற்றி பின்வருமாறு விளக்கினார்.

| | | |
|---|---|---|
| 1) கலியுகம். | - | 4,32,000 |
| 2) துவாபர யுகம் (கலி யுகத்தின் 2 மடங்கு நீளம்). | - | 8,64,000 |
| 3) திரேதா யுகம் (கலி யுகத்தின் 3 மடங்கு) | - | 12,96,000 |
| 4) சத்ய யுகம் (கலியுகத்தை விட 4 மடங்கு). | - | 17,28,000 |
| மொத்தம் | - | 43,20,000 |

இந்த மொத்தம் 43,20,000 ஆண்டுகள் 1 மகாயுகம் என்று அழைக்கப்படுகிறது.

பிரம்ம தேவரின் ஒரு பகல் இவ்வாறு 1000 மகாயுகங்கள் = 43,20,000×1000 = 4,32,00,00,000 வருடங்கள்

அதனால், ஒரு பகல்+ ஒரு இரவு= 8,64,00,00,000 வருடங்கள் இது பிரம்மாவின் ஒரு முழு நாள் (24மணி நேரத்திற்கு சமம்).

பிரம்மாவின் ஒரு வருடம் இப்படியான 360 நாட்கள்= பிரம்மாவின் ஒரு வருடமாகும்.

பிரம்மாவின் ஆயுள் அவ்வாறு 100 வருடங்கள் சேர்ந்தால் அதுவே பிரம்ம தேவரின் முழு ஆயுட்காலம் ஆகும்.

இதிலிருந்து நாம் தெளிவாக அறிய வேண்டியது பிரம்மாவிற்கும் ஆயுட்காலம் உண்டு என்பது.

அதனால், படைக்கப்பட்டாத பரப்பிரம்மன் மட்டுமே நித்தியமானவர், அழியாதவர், முடிவற்றவர் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, எதுவும் நிரந்தரமானது அல்ல. ஆன்மா மட்டுமே நிரந்தரமானது என்பது அறியப்படுகிறது. எனவே, 'ஆன்மா தான் சத்தியம்' என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

அதனால் தான் பத்ரிஜி அவர்கள் சத்தியமான ஆன்மாவை அடையுங்கள் என்று கூறினார். அந்த சத்தியத்தை ஆன்மாவை அடைவதற்கான வழி என்ன? அதுவே"மூச்சின் மீது கவனம்" தியானம். யார் இந்த தியானத்தைச் செய்து சத்தியத்தை அடைகிறார்களோ, அவர்களின் வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட்டது. அவர்களை விட அதிர்ஷ்டசாலிகள் யாரும் இல்லை.

எனவே, இப்போது பகவத் கீதை யுக முடிவு மற்றும் படைப்பின் முடிவு பற்றி என்ன சொல்கிறது என்பதைத் தெரிந்து கொள்வோம்.

**ஸ்லோகம்:**

**பரஸ்தஸ்மாத்து பாவோ'ந்யோ'வ்யக்தோ'வ்யக்தாத் ஸநாதன: |**

**ய: ஸ ஸர்வேஷூ பூதேஷூ நய்யத்ஸு ந வினய்யதி: | (பக.8-20)**

விளக்கம்:- இயற்கையின் வெளிப்படாத நிலைக்கும் மேலான, நித்தியமான மற்றொரு வெளிப்படாத நிலை உள்ளது.

அனைத்து உயிரினங்கள் அழிந்தாலும் அந்த பரமாத்மா அழியாது.

எது புலப்படாததோ, உயர்ந்தோர், இன்றியங்களுக்கு வெளிப்படாததோ, ஆதிகாலம் முதல் நிலைத்திருப்பதோ - அந்த பரமாத்மா எண்ணற்ற உயிர்கள் அழிந்தாலும் அழியாமல் நிலைத்திருப்பான்.

அதாவது, சிருஷ்டி முழுவதும் அழிந்தாலும் இறைவனாகிய ஆன்மாவிற்கு அழிவில்லை.

இதனால் நாம் அறிய வேண்டியது, மாறுவது அனைத்தும் அசத்தியம். மாறாதது ஒன்றே - அதுவே ஆத்மா, அதுவே பரம சத்தியம்.

அவர் மேலும் கூறியதாவது:-

**ஸ்லோகம்:**

**அவ்யக்தாத் வ்யக்தய: ஸர்வா: ப்ரவந்தி அஹரகமே:**
**ராத்ர்யாகமே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்த ஸஞ்ஞகே:**

**(ப கீ :8-18)**

விளக்கம்: பிரம்மாவின் பகல் தொடங்கும் போது, நிலையற்ற மற்றும் நிரந்தரமான அனைத்துப் பொருட்களும் கடவுளிடமிருந்து, அதாவது வெளிப்படாதவற்றிலிருந்து பிறக்கின்றன. இரவு தொடங்கும் போது, அவை அந்த வெளிப்படாதவற்றில் உள்வாங்கப்படுகின்றன.

இதிலிருந்து புரிவது என்ன? இறைவனுக்கு “பகல்” ஆரம்பமானது என்றால் - அவரிடமிருந்தே அனைத்தும் படைக்கப்படுகின்றன.

அதேபோல் “இரவு“ தொடங்கியது என்றால்? படைக்கப்பட்ட அனைத்தும் தெய்வங்களில் மூழ்கி முடிவடைகின்றன.

அதனால் தான் “ இறைவன் கண்கள் திறந்தால் சிருஷ்டி ஆரம்பம் , கண்களை மூடினால் சிருஷ்டி முடிவு” என்று கூறப்பட்டுள்ளது.

பின்வரும் வசனத்திலும் இதுவே கூறப்பட்டுள்ளது.

**ஸ்லோகம்:**

**பூதக்ராம: ஸ ஏவாயம் பூத்வா பூத்வா ப்ரலீயதே!**
**ராத்ர்யாகமே வ ஃ பார்த்த ப்ரபவத்யஹராமே ! (ப. கீ: 8-19)**

விளக்கம்:- ஓ அர்ஜுனா, இந்த உயிரினங்கள் அனைத்தும் தங்கள் கர்மத்தின் அடிப்படையில் பிறக்கின்றன. மேலும் அவை பிரம்மாவின் இரவு தொடக்கத்தில் இறக்கின்றன. பிரம்மாவின் பகல் தொடக்கத்தில் அவை மீண்டும் பிறக்கின்றன.

**ஸ்லோகம்: ஸர்வபூதானி கௌந்தேய ப்ரக்ருதிம் யாந்தி மாமிகாம்!**
**கல்பக்ஷயே புநஸ்தானி கல்பாதௌ விஸ்ருஜாம்யஹம் ॥**

**(ப. கீ: 9-7)**

விளக்கம்:- அர்ஜுனா! கோடிக்கணக்கான ஜீவராசிகள் அனைத்தும் அழிவின் போது என்னுடைய இயற்கையில், மாயாவில் லயித்துவிடும். படைப்பு நேரத்தில் நான் அவற்றை மீண்டும் படைப்பேன்.

இதன் அடிப்படையில், அனைத்து உயிரினங்களும், அனைத்து கிரக அமைப்புகளும், அனைத்து உலகங்களும் அழிவுக்கு உட்பட்டவை என்பதை நாம் அறியலாம். அதாவது நித்தியமானது ஆன்மா மட்டுமே என்பதை நாம் அறிவோம், கடவுள் ஒருவரே அவரே ஆன்மா. எனவே, ஆன்மாவே சத்தியம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

# சத்தியத்தின் மகத்துவத்தை பற்றி மேலும் நாம் அறிந்து கொள்வோம்

1. சிருஷ்டியின் ஆரம்பத்தில் இருந்தது சத்தியமே . சிருஷ்டியின் முடிவில் இருப்பதும் சத்தியமே.
2. இந்த சிருஷ்டி அனைத்திற்கும் சத்தியமே மூலமாகும்.
3. சத்தியமே அனைத்திற்கும் ஆதாரம்.
4. அனைத்து இருப்புக்கும் காரணம் சத்தியமே.
5. சத்தியம் என்றால் எப்போதும் இருப்பது . ஆரம்பத்திலும், நடுவிலும், முடிவிலும் இருப்பது.
6. ஜாக்ரத (விழிப்பு நிலை), ஸ்வப்னம் (கனவு நிலை), சுஷுப்தி (ஆழ்ந்த நித்திரை) . இந்த மூன்று நிலைகளுக்கும் சாட்சியாக இருப்பதே சத்தியம்.
7. “அஹம்” (நான்) என்ற ஞானத்திற்கு சத்தியமே ஆதாரமாக உள்ளது.
8. சத்தியமே மகிழ்ச்சியின் சாராம்சம்.
9. சத்தியம் என்பது ஞானம், அதாவது ஞான ஸ்வரூபம்.
10. சத்தியமே உலகம், உலகம்தான் சத்தியம்.
11. எல்லா இந்திரியங்களின் செயல்களுக்கும் காரணம் சத்தியமே.
12. புருஷன் - பிரகிருதி ஐக்கிய ஸ்வரூபமும் சத்தியமே.
13. சத்தியம் த்ரஷ்டா - அதாவது காண்பவன்; அது காணப்படும் பொருள் அல்ல.
14. சத்தியமே மனம், புத்தி முதலியவற்றை விழித்தெழச் செய்கிறது.

15. சத்தியம் ஒளியின் ஸ்வரூபம் - உலகமெங்கும் பிரகாசிக்க செய்கிறது.

16. சத்தியமே சச்சிதானந்த ஸ்வரூபம்.

சத் - எப்போதும் இருப்பது (நித்ய சத்தியம்)

சித்- சைத்தன்யம் ( உணர்வுடையது)

ஆனந்தம் - எல்லையற்ற பேரின்பம்.

17. சத்தியம் அகண்டன் - துண்டிக்க முடியாதது. அவ்யயம்- இரணடற்றது (அத்வைதம்). இதுவே சத்தியத்தின் ரகசியம்.

18. சத்தியம் இருக்கும் என்பது மட்டுமே அறிய முடியும்; அது இப்படித்தான் இருக்கும் என்று வர்ணிக்க முடியாது. அது எல்லாவற்றிலும் நிறைந்தது; ஆரம்பமும் முடிவும் அற்றது; பேரொளி நிறைந்த சக்தி - அதுவே பரமாத்மா.

# சங்கராச்சாரியாரின் ஆன்ம போதனைகள்

- சத்தியம், அதாவது பிரம்மம் குறித்து அன்ம போதனைகள் மூலம் கூறப்படும் சில உயர்ந்த தத்துவங்களை பார்ப்போம்.
- எதன் ஒளியால் சூரியன் முதலானவை பிராகாசிக்கின்றனவோ, எதை அந்த சூரியன் கூட பிரகாசப் படுத்த முடியாதோ, எதனால் இம்முழு பிரபஞ்சமும் ஒளிர்கின்றதோ- அதுவே பிரம்மம் என்ற அறிந்து கொள்ளுங்கள்.
- அது ஸ்தூலமானதோ, நுட்பமானதோ , நீண்டதோ, குறுகியதோ அல்ல; பிறக்காததோ, மாறாததோ, உருவமற்றதோ, குணங்கள் இல்லாததோ, நிறமற்றதோ, பெயரற்றதோ, இவ்வாறானது எதுவோ - அதுவே பிரம்மம், அதுவே சத்தியம்.
- பாலில் வெண்ணெய் எங்கும் பரவியிருப்பது போல, பிரம்மம் அனைத்திலும் வியாபித்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.
- "இந்த உலகத்தின் சிருஷ்டி (உருவாக்கம்), ஸ்திதி ( நிலைத்தல்), லயம் (அழிதல்) ஆகிய அனைத்தும்
- எவரால் நிகழ்கின்றனவோ, அவரே பரபிரம்மம் என்று பிரம்ம சூத்திரங்களில் (1-2) வேதவ்யாசர் விளக்கியுள்ளார்.
- உள்ளும் புறமும் அனைத்திலும் நிரம்பி, எல்லாத் திசைகளிலும் பரவி, சச்சிதானந்த ஸ்வரூபமாக, இரண்டற்ற (அத்வைத) ஒன்றாக, ஆதியும் அந்தமும் இல்லாமல், மூன்று காலங்களிலும் (கடந்த - நிகழ் - எதிர்) நிலைத்திருக்கின்ற ஒன்றே பிரம்மம் என்பதை அறியுங்கள்.
- எதை கண்டால் வேறு எதையும் காண வேண்டிய அவசியமில்லையோ, எதை அடைந்தால் மறு பிறவி எடுக்க வேண்டியதில்லையோ, எதை அறிந்தால் வேறு எதையும் அறிய வேண்டியதில்லையோ, அதுவே பிரம்மம் என்று உறுதியாக தெரிந்து கொள்ளுங்கள்.

- எதை அடைந்த பிறகு இனி அடைய வேண்டியது எதுவும் இல்லையோ, எத்தகைய ஆனந்தத்தை அனுபவித்த பிறகு இனி பெறுவதற்கு எந்த மகிழ்ச்சியும் இல்லையோ, எந்த ஞானத்தைப் பெற்ற பிறகு இனி அறிவதற்கு எதுவும் இல்லையோ அதுவே பிரம்மம் என்று அறிந்து கொள்ளுங்கள்.
- ஆகாயம் எவ்வாறு எங்கும் பரவி இருக்கிறதோ, அதுபோல பரபிரம்மமும் உள்ளும் புறமும் அனைத்திலும் நிறைந்து உள்ளது. அது அழிவற்றது,
- எப்போதும் மாற்றமற்றது, அனைத்திலும் சமதரிசனம் உடையது, பரிசுத்தமானது, எதிலும் பற்றில்லாதது, எந்த மாசுபாடும் இல்லாதது, அசைவற்றது, துக்கம், பந்தம், பொறாமை மற்றும் பயம் போன்றவற்றிலிருந்து விடுபட்டது என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.
- சூரியனுக்கு - ஒளி, நீருக்கு- குளிர்ச்சி, அக்னிக்கு - வெப்பம் இயல்பாக இருப்பது போல - பரப்பிரம்மத்திற்கு சச்சிதானந்தம், சாஷ்வதத் தன்மை, நிர்மலத் தன்மை இயல்பாகவே உள்ளது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.
- அனைத்திற்கும் ஆதாரமாகவும், சிருஷ்டியின் மூல காரணமாகவும் உள்ள பரபிரம்மத்தில் உலகங்கள் நீரில் தோன்றும் குமிழிகள் போல தோன்றி, வளர்ந்து, அழிந்து கொண்டிருக்கின்றன என்பதை அறியுங்கள்.

இவ்வாறு ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார் அவர்கள் பரபிரம்மத்தின் மகத்துவத்தை பற்றி ஆழமாக விளக்கினார்.

# சத்தியத்தைப் பற்றி உபநிஷதங்களின் வரும் வாக்கியங்கள்

1. "சத்தியம் ஞானம் அனந்தம் பிரம்மம்"

   பொருள்:- சத்தியம், எல்லையற்ற அறிவு பிரம்மம்.

2. "யோ வேதம், விஹிதம் குஹயாம்"

   பொருள்:- ஒவ்வொருவரின் இதயக் குகையில் உறைந்திருக்கும் ஆன்மாவே சத்தியம்.

3. "அனோ ரணியான் மஹிதோ மஹீயான் ஆத்மா குஹயான் ரோஹீதோஸ்ய ஜந்தோ"

   பொருள்:- ஆத்மா (சத்தியம்) அணுவை விடச் சிறியது; பெரியதை விடப் பெரியது.

4. "சதேன சோம்யே தம்கர ஆஸீத்"

   பொருள்:- ஆரம்பத்தில் 'சத்' (உண்மை) மட்டுமே இருந்தது.

5. "ஏகமேவ கல்விதம் ப்ரஹ்ம"

   பொருள்:- பிரம்மம் ஒன்றே; இரண்டாவது எதுவும் இல்லை.

6. "சர்வம் கல்விதம் ப்ரஹ்ம"

   பொருள்:- இவ்வுலகிலுள்ள அனைத்தும் பிரம்மம்.

7. "பிரம்ம வித்யே பிரம்மேவ பவதி"

   பொருள்:- பிரம்மத்தை அறிந்தவன் தானே பிரம்மமாகிறான்.

8. "அரூபம் அஸ்பர்ஷம் அசப்தம் அவ்யயம்"

   பொருள்:- அதற்கு ரூபம் இல்லை; தொட முடியாது; ஒலி இல்லை; அது அழிவற்றது.

9. "அஹாதிமத் பரம்ப்ரம்ஹ நஸத்தன்ன ப்ரதுசயதே"

   பொருள்:- அந்த பிரம்மம் ஆகியுள்ளது; அது 'உண்டு' என்றும் 'இல்லை' என்றும் கூற முடியாது.

10. "சோ ஹம் ப்ரஹ்ம"

    பொருள்:- அந்த பிரம்மமே நானாக இருக்கிறேன்.

11. "தமேவாஹா"

    பொருள் :- நீயும் நானும் வேறில்லை; அந்த பிரம்மமே நான்.

12. "அஹம் பிரம்மாஸ்மி"

பொருள்:- நானே பிரம்மன்.

13. ஸ்லோகம்:

**“ந ஜாயதே வா கதாசிந்நாயம் பூத்வா பவிதா வா ந பூய:**
**அஜோ நித்ய: ஸாஸ்தோயம்**
**புரோட்டோ ந ஹந்யதே ஹந்யமாதே ஸரீரே”** (ப கீ: 2-20)

விளக்கம்:- இந்த ஆன்மா, பிரம்மம், அதாவது சத்தியம் ஒருபோதும் பிறப்பதில்லை, ஒருபோதும் இறப்பதில்லை மீண்டும் புதியதாவதில்லை. காரணம், அது பிறக்காதது, நித்தியமானது, பழமையானது. உடல் அழிந்தாலும், ஆன்மாவை அழிக்க முடியாது.

# ஞான நேத்திரம்

மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் ஆகிய நான்கு விதமாகச் செயல்படும் மனதை முழுமையாக இனைந்தவர்களே ஞான நேந்திரம் அடைந்தவர்கள்.

ஒரு வகையில், மனதை சூன்யம் செய்தவர்களால் மட்டுமே, "மூச்சின் மீது கவனம்" செலுத்தி தியானம் செய்பவர்கள் மட்டுமே ஞான நேந்திரம் அடைய முடியும். அவர்களையே ஆத்ம ஞானிகள் என்பார்கள்.

எனவே, ஒருவர் தன்னைப் பற்றிய ஞானம் பெறும்போது தான் மனித வாழ்க்கை முழுமையடைகிறது. மேலும், நூறு ஆண்டுகள் வாழ்ந்தாலும் ஆத்ம ஞானம் இல்லையெனில் மனித வாழ்க்கை முழுமையடைவதில்லை.

பத்ரிஜி அவர்கள் வேறு என்ன சொன்னார் என்றால்? எத்தனை பிறவிகள் எடுத்தாலும், பலர் அசத்தியத்திலேயே வாழ்கிறார்கள். யாராக இருந்தாலும் சரி சத்தியத்தில் வாழ்ந்தால் மட்டுமே " மோட்சம்" என்றார்.

மேலும், சத்தியத்தை அறிந்து, அதில் வாழக்கூடிய பிறப்பே உயர்ந்த பிறப்பு என்று கூறினார்.

ஆகையால், சத்தியம் என்கிற ஆன்மாவை நாடுவோம். அந்த மார்க்கமே பத்ரிஜி அவர்கள் அனைவருக்கும் வழங்கிய "மூச்சின் மீது கவனம் " தியானம்.

அவர் மேலும் கூறியது கிருஷ்ணர் நான்கு வயதிலேயே தியானம் கற்றார். ஸ்ரீ ராமர் பத்து வயதிலேயே தியானம் கற்றார். ஆஞ்சநேய சுவாமி இரண்டு வயதிலேயே தியானம் கற்றார்.

எனவே, நாமும் சத்தியத்தின் பக்கம் திரும்புவோம், அதாவது, "மூச்சின் மீது கவனம் செலுத்தி" தியானிப்போம், சத்தியத்தை அறிந்துகொள்வோம், சத்தியத்தில் வாழ்வோம்.

சத்தியத்தில் வாழ்வது என்றால் என்ன? " நான் உடல் அல்ல ", நான் மனம் அல்ல",

"நான் ஆன்மா" என்ற உணர்வில் வாழ்வது. அதாவது ஆன்ம சாட்சியாக அன்புடன், அறிவுடன் வாழ வேண்டும்.

அதுமட்டுமல்ல, சத்தியத்தைப் பற்றி இன்னும் தெரிந்து கொள்வோம்.

1. **சத்தியம் என்றால்?** அது நித்தியமானது, நிரந்தரமானது, அழியாதது. காலங்கள் மாறினாலும், யுகங்கள் மாறினாலும் அது மாறாமல் எப்போதும் இருப்பது.

அதாவது, அது பிறக்காது, வளராது, மாற்றமடையாது, குறையாது, அழியாது.

அதுவே "ஆன்மா" அதுவே "பரம் பொருள்" (இறைவன்).

2. **சத்தியம் எங்கே கிடைக்கும?** "தேக திருஷ்டியை (உடல் பார்வை)விட்டுவிட்டு ஆன்மா தரிசனத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்." அதாவது சவ திருஷ்டியை விட்டு சிவ திருஷ்டியை அடையுங்கள்.

3. **சத்தியப் பயணம்** உள்ளங்காலிலிருந்து தலையின் உச்சிவரை உயர்வதாகும். அதாவது, அறியாமை நிலையிலிருந்து ஞான நிலைக்கு உயர்வது. (மூலாதாரத்திலிருந்து சஹஸ்ரார சக்ரம் வரை உள்ள உள்ளார்ந்த ஆன்மீக உயர்வு)

4. **சத்தியத்தின் மகத்துவம்.** " THERE IS NO RELIGION HIGHER THAN TRUTH". "சத்தியத்தை விட உயர்ந்த மதம் இல்லை".

5. **சத்தியம் அனுபவத்திற்கு வந்தால்?**

"அனைவரும் ஒன்றே", " அனைத்தும் நானே" - நானே அனைத்தும்" என்ற உணர்வில் வாழ முடிந்தால் அதுவே சத்திய அனுபவம்.

6. வெற்றி தோல்வி இரண்டையும் சமமாக ஏற்றுக்கொள்ள முடிவது தான் சத்தியமாக வாழ்வதற்கான அடையாளம். ஏன் "சத்தியத்திற்கு கூட அதன் போராட்டங்கள் இல்லாமல் இல்லை."

இதன் பொருள், சத்தியத்தில் அடைக்கலம் தேடுபவர்களுக்கும், சத்தியத்தின் பாதையில் பயணிப்பவர்களுக்கும், சத்தியத்தில் வாழ்பவர்களுக்கும் சிரமங்கள் தவிர்க்க முடியாதவை என்பதாகும். அந்த கஷ்டங்களிலும் மன அமைதி குலையாமல் இருப்பதே சத்தியத்தில் வாழ்வதாகவும்.

# சத்தியத்தை அடைந்தால்

சத்தியத்தை உணராத வரை ஆஸ்திகராக(நம்பிக்கையுள்ளவராக) தோன்றினாலும் உண்மையில் நாஸ்திகரே. ஏனெனில் சத்திய அனுபவமே உண்மையான இறைநம்பிக்கை.

நல்லவர்களின் துணையுடன்! சத்தியமானவர்களின் துணையுடன் ஒருவர் ஒரு துண்டு உலர்ந்த ரொட்டியைச் சாப்பிட வேண்டியிருந்தாலும் உன்னதமானது. அது இனிப்புப் பொருட்களை விட பல லட்சம் மடங்கு உயர்ந்தது என்பதை அறிய வேண்டும்.

சத்தியமான ஆத்மாவை (இறைவன்) சாராமல், அசத்தியத்தை சாரந்தால் அதாவது, புகைப்படங்கள், சிலைகள், மரங்கள், பறவைகள், விலங்குகள், மனிதர்கள், மனம், இசை என எதுவாக இருந்தாலும், இறைவனின் சக்திகளும் பண்புகளும் வராது.

எப்படி என்றால்? நெருப்புக்குப் பதிலாக நெருப்பு உருவத்தை நீங்கள் அணுகினால் சூடு கிடைக்காது, குளிரும் போகாது. அதேபோல் சத்திய அனுபவமில்லாமல் வெளிப்படையான வழிபாடு மட்டும் போதாது.

அதனால் தான் ஞானிகள் கூட இருப்பவர்களுக்கு எந்த ஞானமும் வராது. ஆனால் அவர்கள் சொல்வது போல் சத்தியத்தைப் நாடினால் நீங்களும் ஞானியாகலாம்.

சத்தியத்தில் வாழ்பவர்கள் அமைதியையும், அசத்தியத்தில் வாழ்பவர்கள் துக்கத்தையும் பெறுவார்கள்.

சிலர் எப்போதும் பூஜை, விரதம் மற்றும் ஜபங்களும் நல்ல செயல்களும் செய்கிறார்கள். ஆனால் சத்தியத்தை அறிய மாட்டார்கள், அத்தகையவர்கள் அறியாமையில் உள்ளனர்.

தாயாக இருப்பது பெரிதல்ல. ஆனால் சத்தியமான தாயாக வாழ்வதே பெரிது.

அதேபோல், மனிதராக பிறப்பது பெரிதல்ல சத்தியத்தில் வாழ்வதே பெரிது.

# ஆன்ம - விசாரணை
## (சத்திய விசாரணை)

“நேதி, நேதி” என்றால் “ இது நான் அல்ல...இது நான் அல்ல”... என்று ஒவ்வொன்றாக நிராகரித்து ஆராய வேண்டும். இது உடல் அல்ல, மனம் அல்ல, சிந்தனை அல்ல, அஹங்காரம் அல்ல இவ்வாறு நீக்கிக் கொண்டே போனால் எதை நீக்க முடியாதோ அதுவே ஆன்மா என்பதை அறிய வேண்டும்.

ஆன்மா என்றால் என்ன? அனாத்மா என்றால் என்ன? அறிய வேண்டும். புல்லில் இருந்து தானியத்தை பிரிப்பது போல் ஆத்மாவை பஞ்சகோசங்களிலிருந்து பிரித்தரிய வேண்டும். இவற்றை எல்லாம் தாண்டி சுய பிரகாசமான சைத்தன்யத்துடன் ஐக்கியம் அடைய வேண்டும். அப்போது மீதிருந்தது சுத்த சுய வைபவமே.

நித்தியமான பொருள் சத்தியம், அதுவே ஆன்மா. அதைத் தவிர மற்ற அனைத்தும் ஒரு மாயை. அதுதான் சுயமற்ற தன்மை. இரண்டு முக்கிய விசாரணைகள் முதலாவது நாம் காணும் உலகம்(தஷ்யம்-காணப்படுவது) மற்றொன்று அதை அறியும் நாம் (த்ரஷ்டா-காண்பவன்). இந்த வகையான புரிதலே “ ஆன்ம ஞானம்”.

காணப்படும் உலகிற்கு சுய அஸ்தித்வம் இல்லை. அது காண்பவரின் மனதைத் தவிர தனியே எதுவும் இல்லை. ஆழ்நிலை சத்தியமாகிய ஆன்மாவே உண்மையான சத்தியம். அத்வைத நிலையில் சங்கல்பங்கள் எழாது. அங்கு த்வைதம் (இருமை) என்பது நினைத்துப் பார்க்க முடியாதது. அத்தகைய அல்லாத ஞானத்தை உணர்ந்தால் ஆன்ம அனுபவம் தானாக வெளிப்படும்.

"மற்ற அறிவியல் ஞானம் எல்லாம் தற்காலிகமானது. ஆனால் பிரம்ம ஞானம் வந்தால் பிரம்மமே அடையப்படும்."

# ஆன்மா - அனாத்மா விவேகம்

ஆத்மானாத்ம விவேகம் மூலம் ஆத்மாவே சத்தியம் என்றும், அதற்கு விரோதமான அனைத்தும் மாயை என்று தெளிவாக அறியப்படுகிறது. அத்தகைய மாய வடிவங்களே பஞ்சகோசங்கள். பஞ்சகோசங்களிலிருந்து விடுபட்டவனே முக்த புருஷன் (விடுதலை பெற்றவர்).

மாயையான அனாத்மாவில் தோன்றுவது எல்லாம் மாயையின் பண்புகளே. அதனால் அங்கே வேறுபாடு, பன்மை, கருத்து மாறுபாடு தோன்றும். ஆனால் ஆத்மா அத்வைதமானது (ஒன்றே ஒன்று). அதில் வேறுபாட்டிற்கு இடமில்லை. இந்த சத்தியத்தை ஆராய்ந்து தெளிவாக உணர்ந்தவன் பஞ்சகோசங்களை தாண்டி உயர்கிறான்.

அன்னமய கோசம் (உடல் ) காணப்படும் பொருள் உணரப்பட்டதிலிருந்து(த்ரஷ்டா) வேறுபட்டது என்பதால், காணமுடியாத ஆன்மா காணக்கூடிய ஆன்மாவாக மாறுவது சாத்தியமில்லை. எனவே, ஆன்மா உணர்வு மூலமாக இருக்கும் உடலாக இருக்க முடியாது.

ஆத்மா அனந்தம் - எல்லையற்றது அது வரம்பற்றது. அதை இயக்கும் சக்தி, உடலுக்குள் இயங்கும் பிராணன் உடலுக்கு மட்டுமே கட்டுப்பட்டது அது எல்லையுடையது. ஆகையால் எல்லையற்ற ஆன்மாவாக மாற முடியாது. எனவே, ஆன்மா பிராமணய கோசம் ஆக முடியாது.

மனம் ஜடத்தன்மை கொண்ட கருவி. அது சிந்தனை, சந்தேகம், உணர்ச்சி ஆகியவற்றால் இயங்குகிறது. ஆனால் ஆன்மா சுத்த சைதன்யம் (தன்னால் பிரகாசிக்கும் சித்தம்) . படமான மனம் சைதன்யமான ஆன்மா ஆக முடியாது. ஆகவே, ஆன்மா மனோமய கோசம் ஆக முடியாது.

நிச்சய ஆன்மாவாகிய புத்தியே விஞ்ஞானமய கோசமாக தெரிகிறது. ஆனால் நிச்சயம், அநிச்சயம் ஆகிய இரண்டையும் ஒளியூட்டுவதே ஆன்மா. இவ்விரண்டும் ஒன்றாக

இருக்க முடியாது. எனவே, ஆன்மா விஞ்ஞானமய கோசமும் ஆகாது.

சுஷுப்தி (ஆழ்ந்த நித்திரை நிலை) ஆனந்தமய கோசம் . அது அறியாமையின் ஒரு ஆடை(அஜ்ஞான ஆவரணம்). அறியாமை உள்ளது என்று அறியும் சாட்சி ஆன்மா. அறியாமையை அறியும் சாட்சி அறியாமை அல்ல. ஆகவே ஆன்மா ஆனந்தமய கோசமும் அல்ல.

இந்த பஞ்சகோசங்களுக்கு ஆதாரமாக இருந்து, அவற்றிலிருந்து வேறுபட்டு இருக்கிறதோ அதுவே ஆன்மா.

அந்த அன்மாவே சத்து (இருப்பு, இருப்பின் உண்மை).

அப்படியானால், அந்த ஆன்மாவை அறியும் " சித்து" (சைதன்யம்) ஆகிய நீ யார்? சத்துவை விட சித்து வேறுபட்டு இருக்கிறதா?

**"சத்த யாஹி சித்**
**சித்த யா ஹ்யஹம்"**

அதாவது, சத்துவே சித்து, அந்த சித்துவே " நீ ", என்று ரமண மகரிஷி உபதேச நூலில் கூறுகிறார். ஆகையால் ஆத்மா - நாத்ம விவேகம் பெற்று பஞ்சகோசங்களான உடல், பிராணன், மனம், புத்தி, ஆனந்தமய ஆடை இவற்றை அனைத்தையும் தனித்தனியாக ஆராய்ந்து " இது நான் அல்ல" என்று நீக்கினால் மீதமிருப்பது சுய பிரகாசமான சுத்த சைதன்யம் . அதுவே ஆத்மா, அதுவே நீ. இதை தெளிவாக உணர்வதே ஆத்மானாத்மா விவேக ஞானம்.

# சதானந்த யோகி என்ன சொன்னார் என்றால்?

“நீ தேடுவது அடையப்படக்கூடாது, நீ தேடாததை மறுக்கக் கூடாது,

அது வந்தால், அதைக் கொண்டாடக் கூடாது, அது போனால், அதைக் குறித்து வருந்தக் கூடாது” என்றார்.

அதாவது, இல்லாததை விரும்பக் கூடாது, இருப்பதை மறுக்க கூடாது, வருவதைக் கண்டு சந்தோஷப்படக் கூடாது, போவதை நினைத்து வருத்தப்படக்கூடாது என்று தெரிந்து கொள்ளவும்.

உலகியல் வாழ்வு என்பது தற்காலிகமான உடல் சார்ந்தது. ஆன்மா என்பது நிலையானது. உடல் அழிந்து போகும், ஆன்மா அழியாது. எனவே, பிறப்பு மற்றும் இறப்பு பற்றி கவலைப்படாமல், ஆன்மாவின் உண்மையை எண்ணு.

நீ ஒரு ஆன்மா. இந்த உடல் அழிந்தாலும், நீ மீண்டும் பிறந்து வேறு ஒரு உடலை ஏற்கும். எனவே, அழக்கூடாத ஒன்றிற்காக நீ ஏன் வருந்துகிறாய்? நீ இறந்து மீண்டும் பிறக்கிறாய் என்பதால், ஏன் அச்சப்படுகிறாய்? ஆன்மா எப்போதும் இருக்கும். இந்த உண்மையை மறந்து, நீ ஏன் துன்பப்படுகிறாய்.

மறுபிறவி குறித்து நாஸ்திகம் மரணத்தை ஏற்றுக் கொள்கிறது, ஆனால் மறுபிறவியை ஏற்றுக் கொள்வதில்லை. 1930 ஆம் ஆண்டில் “சாந்தி தேவி” என்ற பெண், தான் சீதாபுரியில் இருந்ததாகவும், அங்கு தனது கணவர் மற்றும் குழந்தைகள் இருப்பதாகவும் கூறினார். அவர் கூறியது போலவே, குழந்தைகள் இருந்ததும் கண்டறியப்பட்டது. இத்தகைய நிகழ்வுகள் பல உள்ளன என்று பத்ரிஜி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அபிமன்யு போரில் இறந்தபோது அர்ஜுனன் துடித்தான். "என் மகன் உன்னால்தான் இறந்தான்" என்று கிருஷ்ணனைப் பிடித்துக் கூறினான். அர்ஜுனனும் உடலை மட்டுமே நினைத்துத் துடித்தான். உடலை மட்டுமே பற்றிக்கொண்டு வாழ்வது

உலகியல் வாழ்வாகும். ஆன்மாவை உணர்ந்து வாழ்வதே ஆன்மீக வாழ்வாகும்.

உடலுக்கு இறப்பு உண்டு, ஆனால் ஆன்மாவுக்கு இறப்பு இல்லை. அனைவரும் ஆன்மாவை உணர்ந்து வாழ வேண்டும்.

யஷனின் கேள்விகளில் ஒன்று....

"உலகில் மிகவும் ஆச்சரியமான விஷயம் எது?" என்று யஷசன் கேட்கிறான். அதற்கு தர்மராஜா "சுற்றிலும் அனைவரும் இறந்து கொண்டிருந்தாலும், தான் மட்டும் அழிய மாட்டேன் என்று ஒவ்வொரு மனிதனும் நினைக்கிறான். இதுவே மிகவும் ஆச்சரியமான விஷயம்" என்று கூறுகிறார்.

அனைவரும் கண்டிப்பாக மரனிக்கத்தான் வேண்டும். இந்த அடிப்படை உண்மையை உணர்ந்தால் மட்டுமே ஆன்மீக தைரியமும் மகிழ்ச்சியும் கிடைக்கும். ஒவ்வொருவரும் உலகத்தில் எங்கும் இல்லாத கஷ்டங்கள் தங்களுக்குத்தான் வருது என்று நினைக்கிறார்கள். இது மிகப்பெரிய முட்டாள்தனம், மிகப்பெரிய அசத்தியம்.

சத்தியத்தில் வாழ்பவர்கள் எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் மகிழ்ச்சியாக வாழ்வார்கள். அசத்தியத்தில் வாழ்பவர்கள் எப்போதும் வருத்தப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். ஆன்மீகம் என்பது சத்தியத்தில் வாழ்வதாகும். உலகியல் என்பது சத்தியத்தை விட்டுவிட்டு வாழ்வதாகும். இறப்பு என்பது பிறப்பிலிருந்து சாத்தியமானது. அதுதான் கீதையில் சொல்லப்பட்டிருக்கிறதே?

**ஸ்லோகம்:**

**ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யுர் த்ருவம் ஜன்ம ம்ருதஸ்ய ச**
**தஸ்மாதபரிஹார்யேர்தே ந த்வம் ஸோசிதுமர்ஹஸி**

**(ப.கீ: 2-27)**

விளக்கம்: எப்படியும், "பிறந்தவனுக்கு நிச்சயம் இறப்பு உண்டு, இறந்தவனுக்கு நிச்சயம் பிறப்பு உண்டு". இந்த தவிர்க்க முடியாத விஷயத்திற்காக வருத்தப்படக் கூடாது.

ஏன் அழறீங்க, துக்கம் இல்லாத ஒரு விஷயத்துக்காக? ஆன்மீகம் என்பது எப்போதும் சத்தியங்களை நினைவுபடுத்துவதாகும். "பிறந்தவனுக்கு நிச்சயம் இறப்பு உண்டு" என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் "இறந்தவன் மீண்டும் பிறப்பான்" என்பது பெரிய ஆன்மீக ரகசியம்.

பத்ரிஜி அவர்கள் என்ன சொன்னார் என்றால்? எத்தனை பிறப்புகள் எடுத்தாலும் அனைவரும் அசத்தியத்திலேயே வாழ்கிறார்கள். மோட்சம் பெற வேண்டுமானால் சத்தியத்தில் வாழ்வது அவசியம். அதனால்தான் " அசத்தியமான உருவ வழிபாடு வேண்டாம், சத்தியமான ஆன்மாவையே தியானத்தின் மூலம் ஆராதிக்கச் சொன்னார்."

மேலும், சத்தியத்தை அறியும், சத்தியத்தில் வாழும் பிறப்பே உன்னதமான பிறப்பு என்று பத்ரிஜி அவர்கள் கூறியிருக்கிறார்.

எனவே சத்தியத்தை - அதாவது ஆன்மாவை - அடையுங்கள். அதுவே பத்ரிஜி அவர்கள் நமக்கு வழங்கிய "மூச்சின் மீது கவனம் - தியானம்."

அசத்தியமான வாழ்க்கையின் விளைவு விஷமாக மாறும், சத்தியமான வாழ்க்கையின் விளைவு அமிர்தமாக மாறும் என்பதை மறக்க வேண்டாம்.

## To watch Tatavarthy's zoom sessions:

a) Silence meditation from **4 am** to **6.30 am** followed by messages related to soul-knowledge from **6.30 am** to **7.30 am**

Zoom ID: **2413823868** Password: **RAO**

b) The above-mentioned Zoom session will also be livestreamed on **YouTube** from **6.30am to 7.30am.**

c) Those who are in the TVR & TRL WhatsApp group will receive Zoom and YouTube links, along with details about the Tatavarthy's classes. They must save Sindhura's phone number: **8555995217**

d) Those who wish to join the Tatavarthy's WhatsApp group can contact Sindhura: 8555995217, Madhu: 7893917364 or visit www.tst.org.in and click on the "Join WhatsApp Group" link.

## Programs by the Tatavarthy's that will be broadcasted on YouTube:

a) Channel name: **Tatavarthy Veera Raghava Rao**

This channel has 2,000+ videos featuring messages from Mr and Mrs Tatavarthy.

b) PMC has also launched a YouTube channel for Brahmarshi Tatavarthy Veera Raghava Rao.

Channel name: **Brahmarshi Tatavarthy Veera Raghava Rao.**

c) For messages from trainees who have trained under Mr. and Mrs. Tatavarthy, watch the Tatavarthy Spiritual Trainees YouTube channel.

d) You can also go directly to the YouTube app, type Tatavarthy Veera Raghava Rao in the search bar, and watch all the Mr. and Mrs.Tatavarthy videos.

## Information available on Tatavarthy's website:

***Website address: www.tst.org.in***

a) Details of programs conducted under the guidance of Mr. and Mrs. Tatavarthy and Google Maps location are available.

b) All books by Mr. and Mrs. Tatavarthy are available in PDF format for free download in Telugu, Kannada, Hindi, and English languages.

c) All the messages of Mr. and Mrs. Tatvarthy are organized in concept-wise YouTube playlists.

d) Summaries of Mr. and Mrs. Tatavarthy's messages are provided in the form of quotations.

e) The gallery of Mr. and Mrs. Tatavarthy is also available.

For registration of a 3 day free meditation and soul-knowledge training classes held in Bhimavaram on the 1st, 2nd, and 3rd of every month, contact Sindhura, 8555995217.

## To subscribe to Tatavarthy's YouTube channel:

When you click the YouTube link sent in the WhatsApp group, it will open the Tatavarthy Veera Raghava Rao channel. Once open, you will see the "Subscribe" button-click on it to subscribe. By clicking the bell icon next to it, you can receive notifications of new videos everyday.

Otherwise, visit www.tst.org.in/videos/ Click on "Tatavarthy Veera Raghava Rao" in Section I, or on the names in sections II & III. This will open the respective channels. Once open, click the "Subscribe" button, and by pressing the bell icon next to it, you can get daily video updates.

## Tatavarthy Raghavarao Sir Books in English

| | | |
|---|---|---|
| 1. | Life Science (Part-I) | Rs.120 |
| 2. | Why is Guiding Not Meditation ? | Rs.100 |
| 3. | Which is the right meditation ? | Rs.100 |
| 4. | Die before death! | Rs.120 |
| 5. | The Law of Karma | Rs.100 |
| 6. | Losses caused by Desires | Rs.100 |
| 7. | Benefits of knowing what happens after death | Rs.100 |
| 8. | What is Meditation? | Rs.80 |
| 9. | True Path | Rs.80 |
| 10. | Why soul-knowledge ? | Rs.70 |
| 11. | What comes after death ? | Rs.70 |
| 12. | Learnings through the male and female births | Rs.70 |
| 13. | Who are Soul-murderes? | Rs.70 |
| 14. | How to improve Financial Status ? | Rs.60 |
| 15. | Wisdom is attained only through Meditation | Rs.60 |
| 16. | Brahma Jnan | Rs.60 |
| 17. | What is Intention? | Rs.50 |
| 18. | Why is this life? | Rs.50 |
| 19. | Shankaracharya's Jagrata panchakam | Rs.50 |
| 20. | Vegetarian Food Is Human Food | Rs.50 |
| 21. | Brahman means? | Rs.50 |
| 22. | How to become a master? | Rs.50 |
| 23. | How to become a champion ? | Rs.50 |
| 24. | Truth | Rs.50 |
| 25. | Three types of lives | Rs.50 |
| 26. | Are we residents of this world or the other world? | Rs.40 |
| 27. | Meditation for the Development of Students | Rs.40 |
| 28. | Non violence and vegetarianism | Rs.40 |

| | |
|---|---|
| REBIRTH (Tatavarthy Rajya Lakshmi) | Rs.150 |
| What is Ignorance (Avidya) ? | Rs.70 |



# சத்தியம்

1. சிருஷ்டியின் ஆதியில் இருந்ததும் சத்தியமே. சிருஷ்டியின் இறுதியில் நிலைப்பதும் சத்தியமே.
2. இந்த சிருஷ்டியின் மூல காரணம் சத்யமே.
3. சத்யமே எல்லாவற்றிற்கும் ஆதாரம்.
4. சத்யம் எப்போதும் அழிவற்றது.
5. ஜாக்ரத என்பது விழிப்பு நிலை; ஸ்வப்னம் என்பது கனவு நிலை ; சுஷுப்தி என்பது ஆழ்ந்த நித்திரை. இந்த மூன்று நிலைகளுக்கும் சாட்சியாக இருப்பதே சத்யம்.
6. அஹம் (நான்) என்ற அறிவுக்கும் அடிப்படை சத்தியமே.
7. சத்யமே விஸ்வத்தின் ஆதாரம்.
8. சத்யமே ஞானம்; அது ஞான ஸ்வரூபம்.
9. அனைத்து இந்திரியங்களாலும் செயற்படும் மனதிற்கு காரணம் சத்தியம்.
10. பரம பிரகிருதியின் இயற்கை ஸ்வரூப்மும் கூட சத்தியமே.
11. சத்யமே த்ரஷ்டா ( பார்ப்பவன்) அது சூக்ஷ்மமானது; அது கண்களால் காணப்படுவதில்லை.
12. சத்தியம் இருக்கிறது என்பதை மட்டுமே நாம் அறிய முடியும், அது தெளிவாக வர்ணிக்க முடியாதது, ஆனாலும் அது உள்ளது - ரூபமில்லாத, அளவில்லாத, மேடு பள்ளமில்லாத, மஹா காந்திமய சக்தி - அதுவே பரமாத்மா.

Rs.50/-

தட்டவர்த்தி வீரராகவராவ்

Scan these QR codes using Google Lens to download the books of Mr. Tatavarthy Veera Raghava Rao & Mrs.Rajyalakshmi from the website.

| Telugu Books | English Books | Hindi Books | Kannada Books | Tamil Books |
| --- | --- | --- | --- | --- |